எடுப்பனவுகள் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும். இவை ஒரு ஆண்டுக்குட்பட்ட வெளிநிற்கும் நிலுவைகள் எனின் ஓராண்டிற்கு 4.375 சதவீத கட்டணத்திற்கு இப்போதைக்கு இவை உட்பட்டவை ஆகும். ஒவ்வொரு தொடர்ந்து வரும் ஆண்டிற்கும், ஒரு ஆண்டிற்கு 0,5 சதவீத அதிகரிப்பாக விளங்கி 6.875 சதவீத மட்டம் வரையும் இவை உயரும் வெளிநாட்டுப் படுகடனில் வெளிநின்ற தொகை 1977இல் ரூபா 1,32,210 இலட்சத்தில் இருந்து (சி.எ.உ. 7.050 இலட்சம்) 1978 இல் ரூபா 1,64,460 இலட்சத்திற்கு (சி.எ,உ 8,130 இலட்சம்) உயர்ந்தது. செயற்றிட்ட பண்ட உதவியை பெருமளவு உள்ளடக்கிய நீண்டகால கடன்களின் அதிகரிப்பினுலேயே இது ஏற்பட்டது. நீண்டகால கொடுகடனின் வெளிநின்ற மட்டம் 1977இல் ரூபா. 105,940 இலட்சத்திலிருந்து (சி,எ.உ. 5,610 இலட்சம்) 1978இல் ரூபா 1,38.030 இலட்சத்திற்கு (சி. எ. உ. 6,820 இலட்சம்) உயர்வுற்றது. குறுங்காலத்தில் முதிர்ச்சி பெறும் கொடுகடன்களை நாடும் தன்மை குறைவுற்று இருந்தமையினுல் 1978 இல் வெளிநாட்டுப் படு கடனின் முதிர்ச்சி அமைப்பு மேலும் நீடிக்கப்பட்டது.

1978இல். ஐ. அ. டொலர் நீங்கலாக, முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி குறைந்தது. 1977 நொவெம்பரை அடுத்து பவுண் ஸ்ரேலிங்கிற்கு எதிராக ரூபாயின் பெறுமதி 8.3 சத வீதத்தாலும், யப்பானிய யென்னுக்கு எதிராக 18.8 சதவீதத்தாலும், டீயூச் மாக்கிற்கு எதிராக 16.6 சதவீதத்தாலும், சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராக 6.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது. மாறுக ஐ.அ. டொலருக்கு எதிராக 3.2 சதவீதத்தால் ரூபா உயர்வுற்றது.

## அரச நிதித் தொழிற்பாடுகள்

1977 நவெம்பரில் கொண்டுவரப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் 1978இன் இறைத்தொழிற்பாடுகளினது மட்டத்திலும் போக்கிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. விலை மாற்றங்கள், வரி அடிப்படையை விரிவுபடுத்தியமை, வரி வீதங்களைச் சீராக்கியமை, உயர்ந்தளவு செலவுகள் என்பவை வரவு செலவுத்திட்டத்தைப் பெரும்பாலும் இரட்டிப்பாக்கியுள்ளன. இப் போக்கினைப் பொறுத்தவரையில் அரச செலவினத்தை நுகர்விலிருந்து முதலீட்டுக்கு மாற்றும் மீளமைப்பில் குறிப்பிடத்தக்க முயற்சி காட்டப்பட்டது. 1977 இன் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்த வரையில் அது 1978 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தகைய விளைவை ஏற்படுத்துமென்பதை முன்கூட்டியே மதிப்பிட முடியாதிருந்தது. இறுதியாக நடைமுறைக்கணக்கு ரூ. 7,010 இலட்சம் கொண்ட குறையைக் காட்டியது.

1978 இல் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் ரூ. 1,730 இலட்சம் கொண்ட பெயரளவிலான விரிவுத்தாக்கத்தைக் கொண்டிருந்ததாக அரச கணக்குத் தரவுகள் காட்டுகின்றன. ஆனல் குறிப்பிட்ட பணக் கொடுக்கல் வாங்கலைத் தீர்ப்பதற்கான சீராக்கங்கள் ஆண்டு முடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் ஆண்டு முடிவில் காணப்பட்ட மாற்றப்படாத காசோலைகளின் உயர்ந்த அளவினைக் கணக்கில் எடுக்கும்போது வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் ரூ. 8,930 இலட்சம் கொண்ட சுருக்கத்தாக்கத்தினைக் காட்டின.

---

1. தேசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் அரசினுல் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட பெயரளவிலானமாற்றலாகிய ரூ. 3,900 இலட்சத்திற்கும், வருடமுடிவில் வரையப்பட்ட காசோலை ரூ. 6,660 இலட்சத்திற்கும் ஏற்பத் தரவுகள் சீராக்கப்பட்டன.

அட்டவணை 1.14

# அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1975 – 1979

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1975 | 1976 | 1977 | 1978 ஒப்புத லளிக்கப் பட்ட மதிப்பீடுகள் | 1978 தற் காலிக மானவை | 1979 ஒப்புத லளிக்கப் பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. வருமானம்[1] | 5,084 | 5,739 | 6,686 | 10,830 | 11,633 | 11,429 |
| 2. மீண்டெழும் செலவு | 5,159 | 5,554 | 6,148 | 9,972[3] | 10,408 | 10,734 |
| 3. முற்பணக் கணக்குகள் தொழிற்பாடுகள் (குறை– /மிகை +) ... | — 73 | — 312 | — 430 | —100 | — 1,926 | + 200 |
| 4. நடைமுறைக் கணக்கு (+ மிகை/குறை — ) ... | — 142 | — 128 | + 108 | + 758 | —701 | +895 |
| 5. மூலதனச் செலவு அவற்றில் ... | 2,556 | 3,448 | 3,182 | 5,181[3] | 6,606 | 7,195 |
| கடன்கழைப்பு நிதியம், கடன்தீர் கொடுப்பனவுகள், பன்னாட்டு நிதிசார்ந்த அமைப்புகளுக்கான செலுத்தற் கட்டணங்கள் ... | (596) | (662) | (947) | (1,092) | (1,165)[4] | (1,328) |
| 6. வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை ... | 2,699 | 3,576 | 3,074 | 4,423 | 7,307 | 6,300 |
| 7. பற்றுக்குறைக்கு நிதியிடல் | | | | | | |
| 7.1 உள்நாட்டு மூலங்கள் ... | 1,610 | 2,284 | 1,786 | 1,603 | 2,778 | 1,950 |
| (அ) வங்கியல்லாச் சந்தை கடன்பாடுகள் ... | 1,075 | 1,160 | 1,504 | 1,750 | 2,033 | 1,950 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்பாடுகள் | 379 | 485 | 505 | —147 | 578 | — |
| (இ) வங்கித் தொழில் முறை[2] ... | 156 | 639 | —224 | — | 167[5] | — |
| 7.2 வெளிநாட்டு நிதி .. | 1,059 | 1,326 | 1,779 | 2,820 | 4,471 | 4,350 |
| (அ) பண்டக் கடன்கள் ... | 380 | 633 | 885 | 1,620 | 2,128 | 2,200 |
| (ஆ) செயற் திட்டக் கடன்கள் .. | 275 | 327 | 394 | } 1,200 | 1,665 | } 2,150 |
| (இ) நன்கொடை ... | 404 | 367 | 500 | | 678 | |
| 7,3 பண நிலுவைகளின் பயன்பாடு ... | 31 | — 33 | —492 | — | 58 | — |
| 8. அரசின் இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 184 | 605 | — 715 | — | 173 | — |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியும், திறைசேரியும்.

1. வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட வருவாய், மூலவளக் கொடைகளை உள்ளடக்கவில்லை.
2. வெளிநாடுகளிலுள்ள பன்னாட்டு நிதி அமைப்புக்குரிய சொத்துக்களின் தேவைகளை நிறைவுசெய்ய மத்திய வங்கி வழங்கிய சிறப்பு முற்பணங்களை உள்ளடக்குகிறது,
3. குழுநிலைத் திருத்தங்களால் முறையே ஏற்பட்ட மீண்டெழும், மூலதன செலவினமாகிய ரூ. 17 இலட்சத்தையும், ரூ. 8 இலட்சத்தையும் உள்ளடக்கும்.
4. வெளிநாட்டு நிர்வாக எடுப்பனவுகளின் மீளக்கொடுப்பனவான ரூ. 1,740 இலட்சத்தையும் உள்ளடக்குகிறது.
5. வங்கித் தொழில் முறைக்கு வழங்கப்பட்ட ரூபாக் கடன்கள் ரூ. 520 இலட்சம் மீளக் கொடுப்பனவுக்காக கிராக்கம் செய்யப்படவில்லை.

மொத்த அரச செலவு 1977 இல் ரூ. 97,600 இலட்சத்திலிருந்து 1978 இல் ரூ 189,390 இலட்சத்திற்கு 94 சதவீதத்தால் உயர்வடைந்தது. மீண்டெழும் செலவு ரூ. 104,080 இலட்சமாக அமைந்து, மொத்த தேசிய உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் 1977 இல் 23 சதவீதமாக இருந்து 1978 இல் 34 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. மூலதனச் செலவு ரூ. 54,410 இலட்சமாக அமைந்தது. மொத்தத் தேசிய உற்பத்தியில் மூலதனச் செலவின் விகிதம் 12 சதவீதத்திலிருந்து 1977 இல் 8 சதவீத வீழ்ச்சி

யடைந்தபோதும் 1978 இல் 15 சதவீதமாக மிக அதிகமாக உயர்வடைந்தது. திறைசேரி வைப்புக்களுக்கும், மத்திய வங்கிக்குமான ஆண்டு முடிவின் பணக் கொடுக்கல் வாங்கல்கள் சில கழிவு செய்யப்பட்டபோது மூலதனச்செலவு விகிதம் 13 சதத்திற்கு வீழ்ச்சியடைகின்றது. ஆயினும் முந்திய ஆண்டைவிட இது குறிப்பிடத்தக்களவு உயர்வானதாகும்.

1978 இன் அரசிறை ரூ. 116,330 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டைவிட 74 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக்காட்டியது. இதன் விளைவாக மொத்த தேசிய உற்பத்தியில் அரசிறையின் விகிதம் 1977 இல் 23 சதவீதமாக இருந்து 1978இல் 32 சதவீதமாக உயர்வடைந்தது.

1978 இல் வரவு செலவுத்திட்டக்குறை ரூ. 73,070 இலட்சமாக அமைந்தது. இது மொத்தச் செலவில் 39 சதவீதமானதாகும். இது சென்ற ஆண்டின் குறையான ரூ. 30,740 இலட்சத்தைவிட குறிப்பிடத்தக்களவு உயர்வானதாகும். சென்ற ஆண்டில் இது செலவின் 31 சதவீதமாக அமைந்தது. மீண்டெழும் செலவு, அரசிறை என்பவற்றின் அதிகரிப்பு வீதம் 1978 இல் ஒரே அளவினதாகக் காணப்படுகின்றது. மறுபுறம் மூலதனச் செலவு மிக உயர்ந்தளவான அதிகரிப்பு வீதத்தைக் காட்டியது. இது 1978 இன் வரவு செலவுத்திட்டக் குறைக்கு வகைகூறியது.

1978இன் நிதித்தொழிற்பாடுகளின் தொகுப்பும் 1979இற்கானஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளும் அட்டவணை 1.14இல் காட்டப்பட்டுள்ளது. 1978இன் அரச இறைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் தேறிய பணக்குறை கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பீட்டுத்தரவுகளுடன் பின்னிணைப்பின் அட்டவணை 9 இல் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

தற்காலிகத் தரவுகளின்படி 1978 இன் அரசிறை ரூ. 116,330 இலட்சமாக அமைந்தது. இது 1977 ஐவிட 74 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பு ஓரளவுக்கு 1978 இன் பொருளாதார மீளெழுச்சியினாலும் ஓரளவுக்கு 1977 நவெம்பரில் ஏற்பட்ட சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்து தேவைப்பட்ட சீராக்கங்களினாலும் ஏற்பட்டதாகும். ஏற்றுமதித்தீர்வைகள், இறக்குமதித்தீர்வைகள், மொத்த விற்பனவு வரிகள் என்பவற்றின் மீள அமைப்பினையும், வருமான வரியில் சில மீளாய்வுகளையும் 1977 இன் சீர்திருத்தங்கள் உள்ளடக்கியிருந்தன. தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றைப் பொறுத்தவரை நாணயப்பெருமதியிறக்கத்தினால் ஏற்பட்ட இலாபங்களைக் குறைப்பதற்காக ஏற்றுமதித் தீர்வைகள் கணிசமானளவு உயர்த்தப்பட்டன இறக்குமதித் தீர்வை வீதங்கள் குறைக்கப்பட்டபோதும் நாணயப் பெறுமதி வீதங்களின் ஒருங்கிணைப்பு வரி அடிப்படையை உயர்த்தியதுடன் இறக்குமதிகள் தளர்த்தப்பட்டமை இறக்குமதிகளின் அளவை அதிகரித்தது. வரி வீத எல்லைகள் சில புறநடைகளுடன் பத்திலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டு மொத்த விற்பனவு வரியும் மீள அமைக்கப்பட்டது.

ஏற்றுமதித்தீர்வைகள் ஏறக்குறைய எட்டுமடங்காக அதிகரித்து இவ் ஆண்டின் மொத்த அரசிறையில் ஏறக்குறைய 30 சதவீதமாக அமைந்தன. ஏற்றுமதிகள் 1978இல் 4 சதவீதத்தால் மட்டும் உயர்வடைந்தபோதிலும் அரசிறை மட்டும் இவ்வாறு மிகப்பெருமளவாக உயர்வடைந்தமைக்குப் பெரும்


பாலும் செலாவணிச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து வரிவீதங்கள் அதிகரித்தமையும், உயர்ந்தவரி அடிப்படையுமே காரணமாகும். இறக்குமதித் தீர்வை மூலம் பெற்ற வரவுகள் பெரும்பாலும் மூன்று மடங்காக அதிகரித்தன. இது செலாவணிவீத மாற்றங்களினாலும், இறக்குமதிகள் 30 சதவீதம் அதிகரித்தமையினாலும் ஏற்பட்டதாகும். முந்திய ஆண்டில் மிகச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த மொத்த விற்பனவு வரிகள் 62 சதவீதத்தினால் கணிசமான அளவு அதிகரித்தன. இது வர்த்தக, தயாரிப்புத்துறைகளில் ஏற்பட்ட அதிகரித்த நடவடிக்கைகள் காரணமாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வரி வீதங்களின் குறைப்பின் எதிரீடுசெய்த ரூ. 1280 இலட்சம் கொண்ட வரி நிலுவைகளின், சேகரிப்பினாலும் ஏற்பட்டதாகும். புகையிலை வரி மூலம் பெற்ற அரசிறை 28சத வீதத்தினால் அதிகரித்தது. இது புகையிலை விற்பனைகள் அதிகரித்தமையாலும் தீர்வைவீதம் அதிகரித்தமையாலும் ஏற்பட்டதாகும். இதே காரணங்களால் மது வரியிலிருந்து பெற்ற சேகரிப்புக்களும் 130 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், தேயிலை வரியிலிருந்து பெற்ற வரவுகள் குறைந்த விலைகள் காரண மாக ரூ. 650 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1977 நவெம்பரில் இல்லாது ஒழிக்கப்பட்ட வெ. செ. உ. சா திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட நிலுவைகள்ரூ. 3290 இலட்சமாகும். இச் சேகரிப்புக்கள் பெரும்பாலும் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளின்படி இறக்குமதிகளின் உடன்மாற்றுச் செலாவணிக் கொள்வனவினால் ஏற்பட்டதாகும்.

ஆய்வுக்குரிய ஆண்டில் பொதியிடப்பட்ட தேயிலையின் ஏற்றுமதியில் 1கிலோவுக்கு 2 ரூபா குறைக்கப்பட்டதையும் இறப்பரின் மீதான தீர்வை 50 சதத்திலிருந்து 75 சதத்திற்கு உயர்த்தப்பட்டதையும் தவிர தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதித் தீர்வையில் எவ்வித மீளாய்வும் செய்யப்படவில்லை. 1978 ஒகத்து 1 இலிருந்து ஒரு மெட்றிக் தொன் தேங்காய்த்துருவலுக்கு ரூ. 6450 ஒரு மெட்றிக் தொன் தேங்காயெண்ணெய்க்கு ரூ. 1650 ஒரு மெட்றிக் தொன் கொப்பறாவுக்கு ரூ. 5420இல் தீர்வை விதிக்கப்பட்டன. தேங்காய்கள் மீதான தீர்வை 1000 தேங்காய்களுக்கு ரூ. 450ஆக குறிக்கப்பட்டது. மேலும் தேங்காய் உற்பத்திகள் மீது நிருவாக வரி அறவிடப்பட்டது. ஏலக்காய், கொக்கோ, கறுவா, கொக்கோ விதைகள் சிற்றனெல்லா எண்ணெய் போன்ற சில ஏற்றுமதிப் பயிர்கள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் இவ்வாண்டில் குறைக்கப்பட்டன. இறக்குமதித் தீர்வை வீதங்கள் நிலையான மீளாய்வின் கீழ் வைத்திருக்கப்பட்டன. நடைமுறையில் உள்ள வரி வீதங்களிலும் தீர்வை மீளாய்வுக் குழுவின் எடுத்துரைப்புக்களின் பேரில் காலத்துக்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்டன.

ஆழ்கடல், கரையோரமீன்பிடிகள், கால் நடை வளர்ப்பு, அரிசி ஆலையிடல், சிறு கைத்தொழில்கள் என்பவற்றின் மீது வரிச்சலுகை வழங்கப்பட்டது. வீடமைப்பிலிருந்து எழும் மூலதன இலாபங்களுக்கு விலக்களிக்கப்பட்டதுடன் கைத்தொழில்கள் மீதான மூலதனங்களுக்குப் பெறுமானத்தேய்வுச் சலுகை வழங்குவதிலும் சீராக்கங்கள் செய்யப்பட்டன. தனியாள் வருமான வரிகளைப் பொறுத்தவரை அடிப்படைக் குடும்பச் சலுகை ஆண்டுக்கு ரூ. 3,600இலிருந்து ரூ. 5,000ஆக உயர்த்தப்பட்டது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவின் முதலீட்டு ஊக்குவிக்கும் வலயங்களில் நிறுவப்படும் கைத்தொழில்களின் மூலதனங்கள் மீது கணிசமான விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன,

## அரசிறையும் செலவும்

*நிதியாண்டுகளின்படி தரவுகள்*




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.


மூலங்கள்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி.

* 1970/71 ஐ உள்ளடக்கியதும், அதுவரையுமான நிதியாண்டுகள் 12 மாதங்களைக்கொண்டு செத்தெம்பர் 30இல் முடிவடைந்தன. 1971/72ஆம் நிதியாண்டுக்குரிய தரவுகள் 1971 ஒற்ரோபர் 1 தொடக்கம் 1972 திசெம்பர் 31 வரையான 15 மாதங்களைக் கொண்ட காலப் பகுதிக்கும் 1973ஆம் ஆண்டுக்குரிய தரவுகள் 1973 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கும் உரியவையாகும்.

செலவு பற்றிய தரவுகள், வாக்களிக்கப்பட்ட மொத்த செலவுகளையும் (கடன்கரைப்பு நிதியங்களுக்குச் செலுத்தப்பட்ட உதவு தொகைகளையும், வருமானத்திலிருந்து நேரடியாகச் செலுத்திய பொதுப்படுகடன் கொடுப்பனவுகளையும் பன்னாட்டு நிதி அமைப்புக்குச் செய்த சிறப்புக் கொடுப்பனவுகளையும் விலக்கி தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியத்திலிருந்து நிதியீட்டஞ் செய்யப்பட்ட செலவுகளையும் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளிலுள்ள தேறிய கொடுப்பனவுகளையும் குறிப்பனவாகும். பின்னிணைப்பு IIIஇல் உள்ள அட்டவணை 9 ஐயும் பார்க்கவும்.

1978இன் எண்தொகைகள் தற்காலிகமானவை.

## பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைபபு நிதியங்கள் நீங்கலாக மொத்தப்படுகடன்
1978ம் ஆண்டு எண்தொகைகள் தற்காலிகமானவை.

1978அரசிறை அமைப்பில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சம் மொத்த அரசிறையில் மறைமுக வரிகள், வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் என்பவை மிக உயர்வாக அதிகரித்தமையாகும். மொத்த அரசிறையில் மறைமுக வரிகளின் சதவீதம் 1977இல் 67 சதவீதமாகவிருந்து 1978இல் 79 சதவீதமாகக் கணிசமாக அதிகரித்தது. இதுமுக்கியமாக வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளின் பங்கு 1977இல் 43 சதவீதமாக இருந்து 1978இல் 53 சதவீதமாக அதிகரித்திருந்தமையால் ஏற்பட்டதாகும். மறைமுக வரிகளுக்கு முக்கியத்துவம் கிடைத்தமை வரிச் சேகரிப்புக்களுடன் தொடர்பான சிக்கல்களை இலகுவாக்கி யிருக்கலாம் ஆனால் கோட்பாட்டு முறையில் நோக்குகையில் வரி அமைப்பில் முன்னேறும் தன்மையைச் குறைவடையச் செய்கிறது. எனினும் மறைமுக வரிகளுடன் இணைந்து முன்னேறும் வரி அமைப்பை வரையமுடியும்.

செலவு

1978இல் அரசின் செலவு ரூ.189,390 இலட்சமாக அமைந்தது. மீண்டெழும் செலவு ரூ. 104,080 இலட்சமாக அமைந்து 69 சதவீத அதிகரிப்பைக் காட்டிய அதே வேளையில் தேறிய மூலதனச் செலவு 143 சதவீதத்தால் அதிகரித்து ரூ.54,410 இலட்சமாக அமைந்தது. கடன்கரைப்பு நிதியத்துக்கும் நேரடி மீளக் கொடுப்பனவுகளுக்குமாக ரூ. 11, 650 இலட்சம் வழங்கப்பட்டது. முற் பணக் கணக்குகளின் கீழான வெளிக் கொடுப்பனவுகள் ஒரு போதும் இல்லாதவாறு உயர்வானதாக ரூ 19,260 இலட்சமாக விளங்கியது.

உயர்ந்த அளவான மீண்டெழும் செலவு ஓரளவிற்கு உயர்ந்த விலை மட்டங்களினாலும் செலாவணி வீத பெறுமானத்தேய்வு காரணமாக செலவுகள் அதிகரித்தமையாலும் ஏற்பட்டதாகும். நுகர்வோர் உதவு தொகைகளைப் பேணுவதில் ஏற்பட்ட அதிகரித்த செலவு, ஏனைய சமூக பணிகள், பொதுப் பாவனைகள், அரச பணி ஊதியங்கள் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, என்பன இவ்வதிகரிப்புக்கான ஏனைய காரணங்களாகும். குடித்தொகையில் ஏறக்குறைய அரைப் பங்கினரிடமிருந்து உதவு தொகை நீக்கப்பட்டபோதிலும் மீண்டெழும் செலவில் முக்கிய அம்சமாக உணவு உதவுதொகை தொடர்ந்தும் இருந்தது. இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணம் ஒரு புசல் நெல்லுக்கான உத்தரவாத விலை ரூ.33 இலிருந்து ரூ.40ஆக அதிகரித்தமையும் செலாவணி வீதம் குறைவடைந்தமையால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா என்பவற்றின் ரூபாப் பெறுமதி உயர்வடைந்தமையும் ஆகும். பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 13,680 இலட்சத்துக்கு உயர்வடைந்தது. அதே வேளையில் அரச ஊழியர்களுக்கான சம்பளம். வளமாக்கி உதவுதொகை அரச கூட்டுத்தாபனங்களின் நட்டங்களை இழப்பீடு செய்தல் தேசிய சேமிப்பு வங்கிக்கான உதவுதொகை போன்ற ஏனைய மீண்டெழும் செலவுகள் ரூ. 16,830 இலட்சமாக அமைந்தது. கல்விமீதான மீண்டெழும் செலவு ரூ. 10,400 இலட்சமாக அமைந்தது அதே வேளை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியங்களை உள்ளடக்கிய பொது நிருவாக அமைச்சின் செலவு ரூ. 6,760 இலட்சமாக அமைந்த வேளையில் வேளாண்மை அமைச்சின் செலவுகள் ரூ 5,100 இலட்சமாகவும் நலத்துறை ரூ. 5,230 இலட்சமாகவும், போக்குவரத்து ரூ. 5,080 இலட்சமாகவும் பாதுகாப்பு ரூ. 4,300 இலட்சமாகவும் அமைந்தன.

முற்பணக் கணக்குகளின் கீழான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் ரூ. 19,260 இலட்சமாக அமைந்தது. இதில் ஏற்பட்ட முக்கிய அதிகரிப்பு கொள்வனவு நடவடிக்கைகளை நிதியிடுவதற்காக உணவுத்திணைக்களத்திற்கு முற்பண

மாக வழங்கப்பட்ட ரூ. 10,500 இலட்சமாகும். ஏனைய விடயங்கள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கான ரூ. 2,000 இலட்சம், இலங்கை-சீன வர்த்தகக் கணக்கின் கீழான வர்த்தக நடவடிக்கைகளை நிதியிடுவதற்குப் பண்டக் கொள்வனவு ஆணையாளருக்கு வழங்கப்பட்ட ரூ. 2,000 இலட்சம் பண்டங்கள் பொருட்களின் கொள்வனவில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 1,170 இலட்சம் என்பவற்றால் ஏற்பட்டதாகும்.

மூலதனச் செலவு

1978 இல் தேறிய மூலதனச் செலவு ரூ. 54,410 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டை விட 143 சதவீத அதிகரிப்பை பிரதிபலித்தது. இது கடன் கரைப்பு நிதியத்திற்கும் பொதுப்படுகடனின் நேரடி மீளக் கொடுப்பனவுக்குமான ரூ. 11,650 இலட்சம் நீங்கலானதாகும். மூலதனச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஒரு பகுதி செலாவணி வீத மாற்றங்களால் ஏற்பட்ட செலவு அதிகரிப்புக்களைக் கொண்டிருந்த அதே வேளையில் கணிசமான அளவு அதிகரிப்பு புதிய அபிவிருத்தி நடவடிக்கையை நிதியிடுவதிலும் ஏற்பட்டது. தற்காலிகத் தரவுகளின்படி ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைப்பயன்பாட்டு மட்டம் 1977 இல் 27 சத வீதத்திலிருந்து 1978 இல் 16 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையும் காணக்கூடியதாக உள்ளது. எனினும், குறைந்த மட்டக் குறைச் செலவு ஓரளவுக்கு சில வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அவற்றின் முடிவான பயன்பாடு காரணமாகத் திறைசேரி, மத்திய வங்கி வைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டதாகும். திறைசேரி வைப்புக்களுக்கான மாற்றல் ஏறக்குறைய ரூ. 2,800 இலட்சமாக அமைந்தது. இது 1979 இல் செலவிடப்படவிருக்கும் அரசின் வீடமைப்புத்திட்டத்திற்காக ரூ. 500 இலட்சத்தையும் உள்ளடக்கும். மேலும், அரச தேசிய அபிவிருத்தி வங்கிக்கான தொடக்க மூலதனத்துக்காக மத்திய வங்கியின் பாதுகாப்பில் ரூ. 3,900 இலட்சம் கொண்ட ஒதுக்கினை மாற்றல் செய்தது. இம்மாற்றல்களுக்கேற்ப சீராக்கம் செய்யும்போது குறைப்பயன்பாட்டு மட்டம் 27 சதவீதமாக விளங்குகிறது.

மொத்த மூலதன வரவு செலவுத்திட்டத்தில் நிதி, திட்டமிடல் அமைச்சு ஏறக்குறைய 31சதவீதமான அளவினைச் செலவிட்டிருக்க கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் பங்கு 18சதவீதமாக இருந்தது. மொத்த மூலதன வரவு செலவுத்திட்டத்தில் காணியும் காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி, கமத்தொழில் அபிவிருத்தியும் ஆராய்ச்சியும்போன்ற வேளாண்மை அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கள் ரூ. 8,310 இலட்சம் அல்லது 15 சதவீதமாக அமைந்தன. மின்சக்தி பெருந்தெருக்கள், போக்குவரத்து, அஞ்சல் தொலை தொடர்புகள் போன்ற உள்ளமைப்பு அபிவிருத்திகளில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கள் ரூ 7,520 இலட்சம் அல்லது 14சதவீதத்தினைச் செலவிட்டன. கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சிலும் வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சிலும் பயன்படுத்தப்பட்ட நிதியின் மட்டம் உயர்வாக இருக்கையில், மொத்தத்தில் சராசரிக்குறைச்செலவினைக் கொண்ட அமைச்சுக்களாக காணியும், காணி அபிவிருத்தியும் (52சதவீதம்) கடற்றொழில் (45சதவீதம்) மின்சக்தி பெருந்தெருக்கள் (29சதவீதம்) திட்டநடைமுறைப்படுத்தல் (28சதவீதம்) என்பன விளங்கின.

**வரவு செலவுத்திட்டக் குறையை நிதியிடல்**

வரவு செலவுத் திட்டக்குறை முந்திய ஆண்டின் ரூ. 30,740 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1978இல் ரூ. 73,070 இலட்சமாக அமைந்தது. அரசு உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ. 28,360 இலட்சத்தையும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்களாகவும் நன்கொடைகளாகவும் ரூ. 44,710 இலட்சத்தையும் பெற்றது.

உள்நாட்டுக் கடன்பாடுகள் சந்தை மூலங்களிலிருந்து பெற்ற ரூ. 22,000 இலட்சத்தையும், சந்தையல்லா மூலங்களிலிருந்து பெற்ற ரூ. 5,780 இலட்சத்தையும் உள்ளடக்கும். சந்தைக் கடன்பாடுகளில் ரூ. 17,500 இலட்சம் ரூபாக் கடன்களிலும் ரூ. 1240 இலட்சம்திறைசேரி உண்டியல்களிலும் ரூ.3,380 இலட்சம் மத்திய வங்கி முற்பணங்களிலும் இருந்து பெறப்பட்டது. அதே வேளை வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் கையிருப்பில் ரூ. 120 இலட்சம் கொண்ட குறைப்பு ஏற்பட்டது. ரூபாக்கடன்கள் முழுவதும் வங்கியல்லாத்துறையிடமிருந்தே கிடைத்தது. எனினும், வங்கித் துறைகளினால் வைத்திருக்கப்பட்ட ரூபாக்கடன்களில் ரூ. 520 இலட்சத்தை அரசு மீளச் செலுத்தியது. திறைசேரி உண்டியல்களைப் பொறுத்தவரை வங்கியல்லாத்துறையின் உடைமைகள் ரூ. 2950 இலட்சத்தினால் அதிகரிக்க வங்கித்துறையின் உடைமைகள் ரூ. 1,710 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்து, ரூ. 1,240 இலட்சம் கொண்ட மொத்த அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் மத்திய வங்கியின் தேறிய முற்பணங்கள் ரூ. 3,380 இலட்சமாக அமைந்தன. திறைசேரி உண்டியல்களினதும் ரூபாக்கடன்களினதும் மீளக்கொடுப்பனவுகளை முறையே ரூ 1,710 இலட்சத்திற்கும் ரூ. 520 இலட்சத்திற்கும் ஏற்ப சீராக்கம் செய்கையில் முழு வங்கித் துறையிலுமிருந்து பெற்ற கடன்பாடுகளின் தேறிய தொகை ரூ. 1,160 இலட்சமாக அமைகின்றது.

சந்தையல்லாக் கடன்பாடுகளில் ரூ. 6,280 இலட்சம் கொண்ட திறைசேரி வைப்புக்கள் முக்கிய மூலமாக விளங்கியது. அதே வேளை ரூ. 2,240 இலட்சம் கொண்ட நிருவாகக் கடன்பாடுகள் மீளச் செலுத்தப்பட்டன. இத்துடன் திறைசேரி பணநிலுவைகளைக் குறைப்பதன் மூலம் ரூ. 580 இலட்சம் பெறப்பட்டது.

வரவு செலவுத்திட்டக்குறையை நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு மூலங்கள் ரூ 44,710 இலட்சமாகும். இவை ரூ. 16,650 இலட்சம் கொண்ட செயற்றிட்டக்கடன்களையும் ரூ. 21,280 இலட்சம் கொண்ட செயற்றிட்டமல்லாக் கடன்களையும் கொண்டிருந்தன. அதே வேளை ரூ. 6,780 இலட்சம் நன்கொடையாகப் பெறப்பட்டது.

**பொதுப்படுகடன்**


1978இல் வெளிநின்ற பொதுப்படுகடன் 24 சதவீதத்தால் அதிகரித்தது. முந்திய ஆண்டின் அதிகரிப்பான 42 சதவீதத்துடன் இது ஒப்பிடத்தக்கது. முந்திய ஆண்டில் ஏற்பட்ட உயர்ந்தளவு அதிகரிப்பு இலங்கை ரூபாவின் செலாவணி வீத ஒருங்கிணைப்புக்குக் காரணமாக படுகடன் பொறுப்புக்களில் ஏற்பட்ட கணிசமான மாற்றத்தினால் விளைந்ததாகும். மொத்தப்படுகடன் ரூ. 309,500 இலட்சமாக அமைந்தது. உள்நாட்டுப்படுகடன் ரூ 163,680 இலட்சமாக அமைய வெளிநாட்டுப் படுகடன் ரூ. 145,820 இலட்சமாக அமைந்தது.

1978 இல் மொத்த உள்நாட்டுப்படுகடன் ரூ. 19,750 இலட்சத்தால் அதிகரித்து ரூ. 163,680 இலட்சமாக விளங்கியது. உள்நாட்டுப்படுகடனில் முக்கிய விடயமாக விளங்கிய இடைத்தர நீண்டகால ரூபாக்கடன்கள் இவ்வாண்டின் மீளக் கொடுப்பனவைச் சிராக்கம் செய்தபின் ரூ. 16,570 இலட்சத்தினல் அதிகரித்தன. இது முந்திய ஆண்டின் ரூ. 13,900 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. முந்திய ஆண்டின் திறைசேரி உண்டியல்களின் ரூ. 2,000 இலட்சம் கொண்ட தேறியமீளக் கொடுப்பனவுக்கு மாருக வரவு செலவுத்திட்டத்தை நிதியிடுவதற்குத் திறைசேரி உண்டியல்களில் இருந்து ரூ. 1,350 இலட்சம் பெறப்பட்டு, ஆண்டு முடிவில் வெளிநின்ற மொத்தத் தொகை ரூ. 26,350 இலட்சமாக விளங்கியது. மத்தியவங்கி முற்பணங்கள் ரூ. 3,380 இலட்சத்தினல் அதிகரிக்க வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் கையிருப்புக்கள் ரூ 110 இலட்சத்தினுல் வீழ்ச்சியடைந்தன.

10 அல்லது 12 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட ரூ. 17,500 இலட்சம் ரூபாய்க்கடன்கள் 1977 இன் ஒதுக்கீட்டுச்சட்டம் இல. 25 இன்படி வழங்கப்பட்டன. இப்பிணைகள் ஆண்டுக்கு 10 சதவீத வட்டியைக் கொண்டிருந்தன. நவெம்பர் மாத அளவில் கடன் திட்டம் முற்ருக செலுத்தப்பட்டு முடிந்தமையால் ஆண்டின் கடைசி இரு மாதங்களிலும் வேறு புதிய கடன்கள் தொடங்கப்படவில்லே. அரசின் கடன்களுக்கு வழமையாக முதலிடுபவர்கள் திறைசேரி உண்டியல்களிலும் முதலிடுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. கடன்திட்டத்துக்கு இவ்வாண்டில் முக்கிய உதவுநர்களாக கடன்கரைப்பு நிதியங்கள், ஊழியர் சேமநிதி, தேசிய சேமிப்பு வங்கி, காப்புறுதிக்கூட்டுத்தாபனம் என்பன விளங்கின. ஊழியர் சேமநிதி அதன் பங்கிளே 1977இல் 27சதவீதத்திலிருந்து 1978இல் 33 சதவீதமாக உயர்த்தியது. இது முக்கியமாக நிதியத்துக்குக் கிடைத்த அதிகரித்த உதவுதொகை காரணமாக ஏற்பட்டதாகும். மறுபுறம், தேசிய சேமிப்பு வங்கி கொண்டிருந்த பங்கு 1977இல் 27 சதவீதமாக இருந்து 1978இல் 22 சதவீதத்துக்கு விழ்ச்சியடைந்தது. இது ஓரளவுக்கு முதிர்ச்சியடையும் குறுங்கால நிலேயான வைப்புக்களே ஈடுகொடுக்கும் பொருட்டு வங்கிகள் குறுங்கால முதிர்ச்சியில் முதலீடு செய்ய வேண்டியிருந்ததினுல் ஏற்பட்டதாகும்.

வெளிநாட்டுக்கடன்களிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் 1978இல் ரூ. 37,160 இலட்சமாக விளங்கியது. மீளக் கொடுப்பனவுகள் ரூ. 5,010 இலட்சமாகும். இவ்வாறு மூலங்களின் தேறிய மாற்றல்கள் செலாவணி வீத மாற்றங்களால் ஏற்பட்ட ரூ. 7,730 இலட்சம் கொண்ட பொறுப்புக்களுடன் ரூ. 32,150 இலட்சமாக விளங்கியது, வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடன் ரூ. 39,880 இலட்சத்தினுல் அதிகரித்து தொடர்ந்து நாலாவது ஆண்டிலும் உள்நாட்டுப்படுகடனே விட உயர்ந்த வீத அதிகரிப்பை பிரதிபலித்தது. மொத்தப் படுகடனில் வெளிநாட்டுப்படுகடனின் பங்கு 1975இல் 25 சதவீதமாக இருந்து படிப்படியாக அதிகரித்து 1976இல் 28 சதவீதமாகவும் 1977ல் 42 சதவீதமாகவும் 1978இல் 47 சதவீதமாகவும் அதிகரித்தது. இது நாட்டின் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களே நிதியிடுவதற்கு நீண்டகால வெளிநாட்டு மூலங்களில் பெருமளவிற்குத் தங்கியிருக்க வேண்டிய தன்மையினே எடுத்துக் காட்டுகின்றது.


## உள்நாட்டுப்படுகடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப் பொதுப்படுகடன்
1978ஆம் ஆண்டின் எண்தொகைகள் தற்காலிகமானவை.

## வெளிநாட்டுக் கடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

செயற்றிட்டமல்லா (பண்டக்) கடன்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்பான்மை நிதியத்தையும் உள்ளடக்கும்.

1978ஆம் ஆண்டின் எண்தொகைகள் தற்காலிகமானவை.

1978 இல் மூலதன வரவு செலவுத்திட்டத்தில் ஏறக்குறைய 60 சதவீதம் இவ்வாறு பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களினுலேயே நிதியிடப்பட்டது. எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க முறையில் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்காத நிலையில், அபிவிருத்தி வரவு செலவுத்திட்டத்தை நிதியிடுவதற்கு வெளிநாட்டு மூலவளங்களில் பெரிதும் தங்கியிருத்தல் பொருளாதாரத்தில் மட்டுமல்ல எதிர்கால வரவு செலவுத்திட்டங்களிலும் கடன் தீர்ப்பனவு சுமையை அதிகரிக்கச் செய்யும். படுகடன் பொறுப்பும் கணிசமான அளவு அதிகரித்து ஏற்றுமதிகளும் மெதுவாக அதிகரித்துச் சென்ற போதிலும் வெளிநாட்டுக்கடன் செலவு விகிதம் 1975 இல் 23 சதவீதம்ஆக இருந்து 1978இல் 15 சதவீதம் ஆக வீழ்ச்சியடைந் துள்ளது. படுகடனின் அளவு பெருமளவு அதிகரித்தமைக்கு அண்மை ஆண்டுகளில் பெறப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை நீண்ட மீளக்கொடுப் பனவுக்காலத்தையும் 5 தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான சலுகைக் காலத்தையும் (மீளச் செலுத்துமதி இல்லாத வேளையில்) கொண்டமையே காரணமாகும். அண்மை ஆண்டுகளில் குறுங்காலக் கொடுகடன்களில் தங்கியிருக்கும் தன்மை குறைவாக இருப்பதும் இதற்குக் காரணமாகும். எதிர்காலத்தில் படுகடன் செலவுச்சுமை கடந்த காலக்கடன்களின் சலுகைக் காலம் முடிவடைந்தவுடன் அதிகரித்துச் செல்லும் போக்கினைப் பதிவு செய்யக்கூடும்.

வெளிநாட்டுப்படுகடனின் மொத்த வரவுகள் ரூ. 15,840 இலட்சம் செயற்திட்டக்கடன்களையும் ரூ. 13,430 இலட்சம் செயற்றிட்டமல்லா (பண்டக்) கடன்களையும் பன்னுட்டு நாணய நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியத்திலிருந்து ரூ. 7,890 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது.

1978இன் செயற்றிட்டக்கடன்கள் நெதர்லாந்திலிருந்து ரூ. 3,480 இலட்சம், சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசிடமிருந்து ரூ. 3,290 இலட்சம், இந்தியாவிலிருந்து ரூ. 960 இலட்சம், குவைத்திலிருந்து ரூ. 610 இலட்சம், சீனுவிலிருந்து ரூ. 470 இலட்சம், சோவியத் சமவுடைமைக் குடியரசுகளின் ஒன்றியத்திலிருந்து ரூ 310 இலட்சம், தென்மார்க்கிலிருந்து ரூ. 120 இலட்சம், கனடாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் இருந்து தனித்தனி ரூ. 50 இலட்சம் ஐக்கிய இராச்சியத்திலிருந்து ரூ. 10 இலட்சம் ஆகிய தொகைகளை உள்ளடக்கியிருந்தது. இதே காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து 4,390 இலட்சமும், பன்னுட்டு அபிவிருத்திச் சபையிலிருந்து ரூ. 1670 இலட்சமும் பன்னுட்டு புத்தாக்க அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூ. 260 இலட்சமும், பெற்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிலிருந்து ரூ. 160 இலட்சமும் பெறப்பட்டன. இவ்வாண்டில் பெறப்பட்ட செயற்றிட்டமல்லாக் கடன்பாடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகள் (ரூ. 5,820 இலட்சம்) யப்பான் (ரூ. 4.260 இலட்சம்) கனடா (ரூ 1,410 இலட்சம்). இந்தியா (790இலட்சம்) சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு (ரூ. 460 இலட்சம்) பிரான்சு (ரூ. 300 இலட்சம்) சோ. ச. கு. ஒ. அங்கேரி ஒவ்வொன்றிலுமிருந்து (ரூ. 10 இலட்சம்) என்பனவாகும்.

உள்நாட்டுப்படுகடன் செலவு விகிதம் (மொத்த அரச அரசிறையில் படுகடன் செலவுக் கொடுப்பனவுகளின் விகிதம்) இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது. 1977இல் இவ்விகிதம் 18 ஆக இருந்து 1978இல் 14ஆக வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுப்படுகடன் 14 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்த வேளையில் அரசிறைச் சேகரிப்புக்கள் முந்திய ஆண்டைவிட மிகக் கூடிய வீதத்தில் அதிகரித்தமையே காரணமாகும். இது 1977இன் இறைச் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்பட்டதாகும்.